குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்

எஸ்.டி.சி. எண். 01/2020

PW1-வெங்கடேஷ் த/பெ. கண்ணன்

தேதி- 07.04.2021

பக்க எண்- 1

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

முருகேசன், வெங்கடாசலம், கோவிந்தன் ஆகியோர் என்னுடைய உறவினர்கள். சீனிவாசன் என்பவர் தீவட்டிபட்டியை சேர்ந்தவர். எதிரியுடன் நான் பத்து வருடங்களாக கமிசன் அடிப்படையில் வியாபாரம் செய்து வருகிறேன். என்னுடைய நிலம் மற்றும் அதன் விபரங்கள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் மாம்பழம் பயிரிடுகிறேனா என்பது பற்றி தாக்கல் செய்யவில்லை. எந்த எந்த வெளி நபர்களிடம் மாங்காய்கள் வாங்கி எதிரிக்கு சப்ளை குறித்த விபரங்கள், ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை.நான் வங்கி மூலமாகதான் பண பரிவர்த்தனை செய்வேனா என்றால் இல்லை. நேரடியாகதான் பணபரிவர்த்தனை செய்வேன். எதிரிக்கும் சில மாங்காய் வியாபாரிகளுக்கும் இடையே நடந்த பிரச்சனையை முருகேசன் என்பவர் முன்னின்று நடத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முருகேசன் என்பவருக்கும் எனக்கும் இடையே எழுத்து வடிவத்தில் பத்திரம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எந்த ரக மாங்காய்களை எந்த வண்டிகளில் எதிரிக்கு சப்ளை செய்தேன் என்ற விபரங்களும், டீசல் ரசீது, டிரிப் ரசீது, டோல் ரசீது ஆகியவற்றையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி விபரங்களுக்குண்டான பில்கள் வைத்துள்ளேன். பண நிலுவைகள் காலாவதியாகக்கூடியவை என்ற விபரம் எனக்கு தெரியாது. 13-09-2018 தேதி வரை நிலுவையில் உள்ள பணம் என்று என் புகாரில் கூறியுள்ள தொகைக்கு எந்த நாளில் இருந்து கணக்கிடப்பட்டுள்ளது என்ற விபரம் வழக்கில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 13-09-2018-அன்று எதிரி மண்டியில் மாலை ஒரு தகராறு நடந்தது என்பது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. நான் கோவிந்தன் மற்றும் வெங்கடாசலம் ஆகியோர் எதிரி மண்டியில் 13-09-2018-அன்று காலை சென்று தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் தனித்தனியாக சென்றுதான் பணம் கேட்டோம். அதற்கு எதிரி வழக்கு காசோலையை கொடுத்தார். 13-09-2018-தேதியன்று இவ்வழக்கின் காசோலையை நான் முருகேசனிடம் பெற்றேனா என்றால் இல்லை நான் சென்று எதிரியிடம் பணத்தை திருப்பி தருமாறு கேட்டதற்கு அவர் காசோலையை கொடுத்தார். என்னுடைய புகாரில் எந்த நேரத்தில் எந்த இடத்தில் வைத்து எதிரியிடம் காசோலையை பெற்றேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை. 13-09-2018-தேதியன்று மாலை எதிரி மண்டியில் நடந்த தகராறு பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு நான் வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றாலும்,

எஸ்.டி.சி. எண். 01/2020

PW1-வெங்கடேஷ் த/பெ. கண்ணன்

தேதி- 07.04.2021

பக்க எண்- 2

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

13-09-2018- தேதியன்று காலை நான், முருகேசன் மற்றும் வெங்கடாசலம் ஆகியோர் எதிரியின் இடத்திற்கு சென்று அவரை மிரட்டினோம் என்றாலும், பின்னர் அன்று மாலை முருகேசன் மற்றும் சிலர் எதிரி மண்டிக்கு சென்று அவரை மிரட்டி காசோலைகள் பெற்றனர் என்றாலும், அவற்றில் ஒரு காசோலையை முருகேசனிடம் நான் பெற்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி சம்பவத்தின் போது என் சார்பாகவும், எதிரி மண்டியில் ஆட்கள் இருந்தனர் என்றால் சரியல்ல. எதிரி மீது சிசிபி போலிசில் நான் புகார் செய்யவில்லை. என்னுடைய புகாரில் சட்டப்படியான கடனுக்கு எதிரி காசோலை கொடுத்தார் என்றும், எதிரியிடம் நான் பணத்தை திருப்பி கேட்டேன் என்றும், குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய புகாரில் பகுதி தொகைக்காகதான் காசோலை கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு எவ்வித கணக்கு வழக்குகளும் வழக்கில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலை தொகைக்கும், எனக்கு வரவேண்டி இருப்பதாக என் புகாரில் குறிப்பிட்டுள்ள தொகைக்கும், சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஒரு உறசியுல்லா என்பவர் பற்றி எனக்கு தெரியாது. முருகேசன் மூலம் ஒரு உறசியுல்லா என்பவர் எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. பிரின்சிபல் என்ற முறையில் நான் உறசியுல்லா மீதுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றாலும், அவ்வாறு நான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு உறசியுல்லாவை தெரியாது. உறசியுல்லா மீது நடவடிக்கை எடுத்தால்தான் எதிரியிடம் இருந்து எனக்கு வரவேண்டிய தொகை என்ன என்பது பற்றி உண்மை நிலவரம் தெரியும் என்றால் சரியல்ல. சிசிபி போலிசில் நான் கொடுத்த புகார் மூலமாக ரூ.51,950/- எதிரியிடம் இருந்து எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். சிசிபி புகார் மூலமாக ரூபாய் 50 லட்ச ரூபாயை மொத்தமாக எதிரியிடம் இருந்து பெற்று சுமார் 60 நபர்கள் எங்களுக்குள் மேற்படி தொகையை பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. எதிரிதான் என்னை அழைத்து ரூ.51,950/-கொடுத்தார். சிசிபி போலிசில் எதிரி மீது புகார் கொடுக்கப்பட்ட போதே 10-11-2018-தேதி அன்று நாங்கள் எதிரி வங்கியில் விசாரித்த வகையில் எதிரி "Stop payment " குறிப்பு கொடுத்து விட்டார் என்ற விபரம் எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு வழக்கு காசோலையை தரவில்லை என்றாலும், காசோலையை வசூலுக்கு செலுத்த எவ்வித அதிகாரமும் தரவில்லை என்றாலும்,

எஸ்.டி.சி. எண். 01/2020

PW1-வெங்கடேஷ் த/பெ. கண்ணன்

தேதி- 07.04.2021

பக்க எண்- 3

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

10-11-2018-தேதியின் போதே எதிரி "Stop payment " குறிப்பு கொடுத்து விட்டார் என்ற விபரம் தெரிந்தும 12-11-2018-தேதியன்று வழக்கு காசோலையை வசூலுக்கு செலுத்தினேன் என்றால் சரியல்ல. சிசிபி போலிசில் புகார் கொடுத்து பின்னர் பைசல் செய்துவிட்ட வழக்கு மூலத்தை வைத்துதான் தற்போதைய வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு மூலத்தை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றாலும், எனவே தான் சிசிபி போலிஸ் புகார் பற்றி இவ்வழக்கில் நான் கூறவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கும் முருகேசன் உட்பட இன்னும் சிலருக்கும் இன்று வரை போலிசில் செல்வாக்கு உள்ளதால் எதிரி எங்கள் மீது இதுவரை கொடுத்த புகார்களை நடவடிக்கை ஏதும் போலிஸ் எடுக்காமல் தடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது.)

(மறு விசாரணை இல்லை)

ஓம்/எம்.ஏ. சுவேதாரண்யன்,<br>குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>விரைவு நீதிமன்றம்,<br>ஓமலூர்.